**DEPOSITION OF WITNESS**

**( Chapter XXIII Code of Criminal Procedure )**

**--**

**IN THE COURT OF CHIEF JUDICIAL MAGISTRATE, PUDUKKOTTAI.**

| | | | |
|---|---|---|---|
| வழக்கு எண். | SC No.41/23 | அரசுத்தரப்பு சாட்சி | P.W.1 |
| பெயர் | கார்த்திகேயன் | கிராமம் | வன்னியன்விடுதி |
| தந்தை / கணவர் பெயர் | கணேசன் | வட்டம் | ஆலங்குடி |
| வயது | | மாவட்டம் | புதுக்கோட்டை |

Solemnly affirmed by Thiru.G.Pandiarajan, Grade -II Bench Clerk of this Court in accordance with the provisions of Act X of 1873. Dated: 10.02.2026

As per the Circular of the Hon'ble High Court, Madras in ROC.No.74663/2024/F1-Dt.21.02.2025 the identity of the witness verified with their identity card.

Aadhar card of the Witness verified.

1,2 எதிரிகள் ஆஜர். எதிரிகள் தரப்பு வழக்கறிஞர் ஆஜர்.

**முதல் விசாரணை**

நான் தற்போது புதுக்கோட்டை மாவட்டம், ஆலங்குடி தாலுகா வன்னியன் விடுதியில் வசித்து வருகிறேன். ஆலங்குடியில்இருந்து கறம்பக்குடி செல்லும் வழியில் மைஸ்கேக் என்ற நிறுவனத்தின் மேலாளராக வேலை செய்துவருகிறேன். ஆஜர் எதிரிகளை தெரியும். அற்புத கண்ணன் என்பவர் பேக்கரி கடையில் என்னுடன் வேலை செய்கிறார். 11.03.2022 தேதியில் மாலை சுமார் 7.00 மணி இருக்கும். ஆஜர் எதிரிகள் இருவரும் வந்தனர். இருவரும் மதுபோதையில்இருந்தனர். எதிரிகளின் நண்பருக்கு பிறந்தநாள் கேக் வேண்டும் என்று கேட்டு பழனி என்ற விஜய் என்ற பெயரை கேக்கில் எழுதி தரும்படி சொன்னார்கள். ரூ.230/- பில் தொகையை செலுத்தும்படி அவரிடம் சொன்னேன். என்கிட்டயே பணம் கேட்பியா என்று அசிங்கமாக தேவடியா புண்ட மகனே என்று ஆபாச வார்த்தையால் திட்டினார். அவர் திட்டியவுடன் எனக்கு கோபமாக இருந்தது. பெயரை எழுதி கொடுத்தவுடன் தான் நான் பணத்தை கேட்டேன். அவர்கள் கேக்கிற்கு பணம் தராமல் கேக்கை எடுத்து சென்றுவிட்டனர். அதன்பிறகு கடை உரிமையாளரிடம் தகவல் தெரிவித்துவிட்டு நடந்த சம்பவங்களுக்கு காவல் நிலையத்தில் புகார் அளித்தேன். என்னிடம் காண்பிக்கப்படுவதுதான் நான் கொடுத்த புகார் ஆகும். அந்த புகார் அ.சா.ஆ.1 ஆகும். நான் சொல்ல சொல்ல போலீசார் புகாரை எழுதினார்.

இதுசம்பந்தமாக போலீசார் என்னை விசாரித்தார்கள்.

(சாட்சியானவர் அரசு வழக்கை ஆதரிக்காமல் சாட்சியம் அளித்ததால் சாட்சியை குறுக்கு விசாரணை செய்ய பிரிவு 157 Bharatiya Sakshya Adhiniyam' 2023 சட்டத்தின் படி அரசு வழக்கறிஞர் வேண்டுகோள் விடுத்தார். அதனால் நீதியின் பொருட்டு சாட்சியை குறுக்கு விசாரணை செய்ய அரசு வழக்கறிஞருக்கு அனுமதி வழங்கப்பட்டது.)

**<u>அரசுதரப்பில் சாட்சியை பகுதியாக குறுக்கு விசாரணை</u>**

எதிரிகள் என்னை அசிங்கமாக திட்டிய உடன், எதிரி மணி (எ) மணிகண்டன் அவருடைய முதுகில் மறைத்து வைத்திருந்த அருவாளை எடுத்து கல்லாவில் உள்ள பணத்தை எடுத்து கொடுடா என்று என்னை மிரட்டியும், அருவாளை என் கழுத்தில் வைத்து மிரட்டி, என் சட்டைப்பையில் இருந்த 500 நோட்டு ஒன்றையும், 100 ரூபாய் நோட்டு ஒன்றையும் மணிகண்டன் என்பவருடன் வந்த வீரையா என் சட்டைப்பையில் இருந்து எடுத்துக்கொண்டார் என்று சொன்னாலும், எதாவது சத்தம் போட்டால் உன்னை காலி செய்துவிடுவேன் என்று போலீஸ் விசாரணையின்போது நான் கொடுத்த புகாரிலும் குறிப்பிட்டுவிட்டு தற்போது எதிரிக்கு பயந்து உண்மையை மறைத்து பொய்யாக சாட்சியளிக்கிறேன் என்றால் சரியல்ல.

**<u>எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை</u>**

புகாரில் எழுதப்பட்டுள்ள விபரங்கள் குறித்து எனக்கு எதுவும் தெரியாது என்றால் சரிதான். சம்பவம் நடந்த இடத்தில் பொதுமக்கள் இருந்தபோதும் எதிரிகளின் செய்கையினால் யாரும் பாதிக்கப்படவில்லை என்று சொன்னால் சரிதான். எதிரிகள் நான் சொல்வதுபோல் எங்களுடைய கடைக்கு வந்து கேக் எதுவும் வாங்கவில்லை என்று சொன்னால் எதிரிகள் இந்த வழக்கில் பொய்யாக சாட்சியமளிக்கிறேன் என்று சொன்னால் சரியல்ல.

Sd/– கார்த்திகேயன்

சாட்சி சொன்னபடி என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு அவரால் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு படித்துக் காட்டப்பட்டு அவரால் சரியென ஒப்புக் கொள்ளப்பட்டு கையெழுத்து பெறப்பட்டது.

Sd/– திரு.K.S.பால்பாண்டியன்,
தலைமை நீதித்துறை நடுவர்,
புதுக்கோட்டை.

**DEPOSITION OF WITNESS**

**( Chapter XXIII Code of Criminal Procedure )**

--

**IN THE COURT OF CHIEF JUDICIAL MAGISTRATE, PUDUKKOTTAI.**

| | | | |
|---|---|---|---|
| வழக்கு எண். | SC No.41/23 | அரசுத்தரப்பு சாட்சி | P.W.2 |
| பெயர் | அற்புதகண்ணன் | கிராமம் | மட்டையன்பட்டி |
| தந்தை / கணவர் பெயர் | தனபாலன் | வட்டம் | பெருங்களூர் |
| வயது | | மாவட்டம் | புதுக்கோட்டை |

Solemnly affirmed by Thiru.G.Pandiarajan, Grade –II Bench Clerk of this Court in accordance with the provisions of Act X of 1873. Dated: 10.02.2026

As per the Circular of the Hon'ble High Court, Madras in ROC.No.74663/2024/F1– Dt.21.02.2025 the identity of the witness verified with their identity card.

Aadhar card of the Witness verified.

1,2 எதிரிகள் ஆஜர். எதிரிகள் தரப்பு வழக்கறிஞர் ஆஜர்.

**முதல் விசாரணை**

நான் மட்டையன்பட்டியில் இருந்து வருகிறேன். ஆலங்குடியிலிருந்து கறம்பக்குடி ரோட்டில் வடகாடு முக்கம் அருகே மைஸ் கேக் என்ற பேக்கரியில் விற்பனையாளராக வேலை செய்து வருகிறேன். அ.சா.1 கார்த்திகேயன் அங்கு மேனேஜராக உள்ளார். ஆஜர் எதிரி இருவரையும் தெரியும். கடந்த 11.03.2022 தேதியில் மாலை சுமாா 07.30 மணியளவில் நான் கடையில் இருந்தபோது எதிரிகள் இருவரும் கேக் கேட்டார்கள். கேக்கின் மேலே பழனி என்ற விஜய் பெயர் எழுதி தரும்படி கேட்டார்கள். நான் அதுபோல எழுதி கொடுத்தேன். கேக்கின் விலை 230 கொடுங்கள் என்று கேட்டோம். அதற்கு 1வது எதிரி மணிகண்டன் புண்டை மவனே என்று என்னை ஆபாசமாக திட்டி என்னிடமே பணம் கேப்பியா என்று கூறினார். கெட்ட வார்த்தை கேட்டவுடன் எனக்கு கோபமாக இருந்தது. அதன்பிறகு பணம் கொடுக்காமலேயே கேக்கை எடுத்துகொண்டு ஓடிவிட்டார்கள். அதன்பிறகு கார்த்திகேயன் கடை உரிமையாளரிடம் தகவல் தெரிவித்து காவல் நிலையத்தில் புகார் கொடுத்துள்ளார். போலீசார் புகாரை வைத்துகொண்டு சம்பவ இடமான எங்கள் கடையை பார்வையிட்டு, பார்வை மகஜர் வரைபடம் தயார் செய்தார். அந்த பார்வை மகஜரிலுள்ள முதல் கையெழுத்து என்னுடையது, இரண்டாவது கையெழுத்து அரிவிக்னேஷ் என்பவர்

போட்டுள்ளார். அந்த பார்வை மகஜர் அ.சா.ஆ.2 ஆகும்.

(சாட்சியானவர் அரசு வழக்கை ஆதரிக்காமல் சாட்சியம் அளித்ததால் சாட்சியை குறுக்கு விசாரணை செய்ய பிரிவு 157 Bharatiya Sakshya Adhiniyam' 2023 சட்டத்தின் படி அரசு வழக்கறிஞர் வேண்டுகோள் விடுத்தார். அதனால் நீதியின் பொருட்டு சாட்சியை குறுக்கு விசாரணை செய்ய அரசு வழக்கறிஞருக்கு அனுமதி வழங்கப்பட்டது.)

**<u>அரசுதரப்பில் சாட்சியை பகுதியாக குறுக்கு விசாரணை</u>**

எதிரிகள் என்னை அசிங்கமாக திட்டிய உடன், எதிரி மணி (எ) மணிகண்டன் அவருடைய முதுகில் மறைத்து வைத்திருந்த அருவாளை எடுத்து கல்லாவில் உள்ள பணத்தை எடுத்து கொடுடா என்று என்னை மிரட்டியும், அருவாளை கார்த்திகேயன் கழுத்தில் வைத்து மிரட்டி, அவருடைய சட்டைப்பையில் இருந்த 500 ரூபாய் நோட்டு ஒன்றையும், 100 ரூபாய் நோட்டு ஒன்றையும் மணிகண்டன் என்பவருடன் வந்த வீரையா கார்த்திகேயன் சட்டைப்பையில் இருந்து எடுத்துக்கொண்டார் என்று சொன்னாலும், எதாவது சத்தம் போட்டால் உன்னை காலி செய்துவிடுவேன் என்று போலீஸ் விசாரணையின்போது நான் கொடுத்த புகாரிலும் குறிப்பிட்டுவிட்டு தற்போது எதிரிக்கு பயந்து உண்மையை மறைத்து பொய்யாக சாட்சியளிக்கிறேன் என்றால் சரியல்ல.

**<u>எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை</u>**

புகாரில் எழுதப்பட்டுள்ள விபரங்கள் குறித்து எனக்கு எதுவும் தெரியாது என்றால் சரிதான். சம்பவம் நடந்த இடத்தில் பொதுமக்கள் இருந்தபோதும் எதிரிகளின் செய்கையினால் யாரும் பாதிக்கப்படவில்லை என்று சொன்னால் சரிதான். எதிரிகள் நான் சொல்வதுபோல் எங்களுடைய கடைக்கு வந்து கேக் எதுவும் வாங்கவில்லை என்று சொன்னால் எதிரிகள் இந்த வழக்கில் பொய்யாக சாட்சியமளிக்கிறேன் என்று சொன்னால் சரியல்ல. போலீசார் சம்பவ இடத்திற்கு வந்து என்னை விசாரிக்கவில்லை என்று சொன்னாலும் சரியல்ல.

Sd/- அற்புதகண்ணன்

சாட்சி சொன்னபடி என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு அவரால் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு படித்துக் காட்டப்பட்டு அவரால் சரியென ஒப்புக் கொள்ளப்பட்டு கையெழுத்து பெறப்பட்டது.

Sd/- திரு.K.S.பால்பாண்டியன்,
தலைமை நீதித்துறை நடுவர்,
புதுக்கோட்டை.